© தமிழ்நாடு அரசு
2026

பதிவெண்: எம். 8055

# தர்மபுரி மாவட்ட அரசிதழ்

## சிறப்பு வெளியீடு

**ஆணையின்படி வெளியிடப்பட்டது**

தர்மபுரி, ஜனவரி 31, 2026
[விசுவாவசு, தை 17– திருவள்ளுவர் ஆண்டு 2057] [எண் 3

## மாவட்ட ஆட்சியர் அறிவிக்கை

*[ ந.க.எண்.3818/2023/(அ–3), நாள் : 31.01.2026 ]*

### 1994–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் பிரிவு 4–ன் கீழ் தர்மபுரி மாவட்ட ஊராட்சிகளின் ஆய்வாளர்/ மாவட்ட ஆட்சியரின் இறுதி அறிவிக்கை

தர்மபுரி மாவட்டத்தில் நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியம், மானியதஅள்ளி கிராம ஊராட்சி 18 குக்கிராமங்களை உள்ளடக்கியது. அதிக எண்ணிகையிலான குக்கிராமங்கள், மக்கள் தொகை பரப்பளவு மற்றும் வீடுகளைக் கொண்ட மானியதஅள்ளி கிராம ஊராட்சியை இரண்டு கிராம ஊராட்சிகளாக பிரித்து கீழ்க்கண்ட விவரப்படி மறுசீரமைப்பு செய்து அரசாணை (நிலை) எண்.344 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (ப.ரா–2(1)) துறை, நாள்:05.12.2025–ன்படி அரசாணை வெளியிடப்பட்டு, அதனை தர்மபுரி மாவட்ட அரசிதழ் எண்.32, நாள்:06.12.2025–ன்படி சிறப்பு வெளியீடாக பிரசுரம் செய்யப்பட்டது. கிராம ஊராட்சிகளை பிரித்து உருவாக்கப்படும் புதிய கிராம ஊராட்சிகள் அடுத்து வரும் சாதாரண தேர்தலுக்கு வார்டுகள் பிரிக்கப்பட்டு, இவ்வாணை நடைமுறைப்படுத்தப்படும். மேலும், மக்கள் தொகை கணக்கெடுப்பு பணி மேற்கொள்ளும் நோக்கத்திற்காக சமுதாய வளர்ச்சி வட்டங்கள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் கிராம ஊராட்சிகளுக்கு உட்பட்ட அதிகார வரம்பு மாற்றங்கள் 31.12.2025 முதல் நடைமுறைக்கு வரும்.

| *ஊராட்சி ஒன்றியத்தின் பெயர்* | *பிரிக்க உத்தேசித்த ஊராட்சி எண்ணிக்கை* | *அரசாணையின்படி பிரிக்கப்பட்ட கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை* |
|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* |
| நல்லம்பள்ளி | 01 | 02 |

மேற்கண்ட அரசிதழ் சிறப்பு வெளியீட்டின் பேரில் 26.12.2025 அன்று தர்மபுரி மாவட்ட ஆட்சியர் அவர்களின் தலைமையில் முதல் குறைகேட்பு கூட்டம் நடத்தப்பட்டதில் எவ்வித ஆட்சேபணையும் பொதுமக்களிடமிருந்து பெறப்படவில்லை. எனவே, அரசு கூடுதல் தலைமை செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, தலைமைச்செயலகம், சென்னை அவர்களின் கடித எண்.12876280/ப.ரா.2(1)/2026-1, நாள்:30.01.2026-இல் வழங்கப்பட்ட அனுமதியின்படி, கீழ்க்காணும் விவரப்படி இறுதி அறிவிக்கை வெளியிடப்படுகிறது.

## பிரிக்கப்பட்ட பின்னர் கிராம ஊராட்சிகளின் முழு விவரங்கள்
## நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியம்

| வ. எண் | ஊராட்சி ஒன்றியத்தின் பெயர் | கிராம ஊராட்சியின் பெயர் | குக்கிராமங் களின் எண்ணிக்கை | புதியதாக உருவாக்கப்படும் கிராம ஊராட்சியின் பெயர் | குக்கிராமங்களின் பெயர் |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) (பிரிக்கப்படும் கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை) | (4) | (5) (குக்கிராமங்களின் எண்ணிக்கை) | (6) (பிரிக்கப்பட்ட பின்) |
| 1 | நல்லம்பள்ளி | மானியதஅள்ளி (2) | 18 | மானியதஅள்ளி (ஜருகு) (10) | 1. மானியதஅள்ளி (ஜருகு) |
| " | " | " | " | " | 2. அஜ்ஜிப்பட்டி |
| " | " | " | " | " | 3. கடத்திக்குட்டை |
| " | " | " | " | " | 4. கொம்புகுட்டை |
| " | " | " | " | " | 5. சந்துரான்கொட்டாய் |
| " | " | " | " | " | 6. பொடரான்கொட்டாய் |
| " | " | " | " | " | 7. மாணிக்கம்புதூர் |
| " | " | " | " | " | 8. கருப்புநாயக்கன்பட்டி |
| " | " | " | " | " | 9. மேற்கத்தியான்கொட்டாய் |
| " | " | " | " | " | 10. கடுக்கப்பட்டியான் கொட்டாய் |

| (1) | (2) | (3) (பிரிக்கப்படும் கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை) | (4) | (5) (குக்கிராமங்களின் எண்ணிக்கை) | (6) (பிரிக்கப்பட்ட பின்) |
|---|---|---|---|---|---|
| 1 | நல்லம்பள்ளி | மானியதஅள்ளி (2) | 18 | கீழ்ஈசல்பட்டி (8) | 1. கீழ் ஈசல்பட்டி |
| " | " | " | " | " | 2. மேல் ஈசல்பட்டி |
| " | " | " | " | " | 3. மேல் பூரிக்கல் |
| " | " | " | " | " | 4. கீழ் பூரிக்கல் |
| " | " | " | " | " | 5. மலையப்ப நகர் |
| " | " | " | " | " | 6. சேசம்பட்டியான் கொட்டாய் |
| " | " | " | " | " | 7. பரிகம் |
| " | " | " | " | " | 8. குரும்பட்டியான் கொட்டாய் |

மேலே கூறப்பட்ட ஆணை, 1994–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் பிரிவு 4–ன் கீழ் வெளியிடப்பட்ட இந்த இறுதி அறிவிக்கையானது தர்மபுரி மாவட்ட அரசிதழில் வெளியிடப்படும் நாள் முதல் அமலுக்கு வருகிறது.

தர்மபுரி,
31.01.2026.

**ரெ. சதீஸ்,**
ஊராட்சிகளின் ஆய்வாளர்/
மாவட்ட ஆட்சியர்,
தர்மபுரி மாவட்டம்.

தமிழ்நாடு எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை ஆணையரால் சேலம் அரசினர் கிளை அச்சகத்தில் அச்சிடப்பட்டு மாவட்ட ஆட்சியரால் வெளியிடப்பட்டது.

Scanned with OKEN Scanner